

1/-

# கூட்டு வழிபாடு

ஆத்மஜோதிப் பிரசுரம் - நாவலப்பிட்டி. இலங்கை.

ஓம்

# கூட்டு வழிபாடு

நாவலப்பிட்டி,

ஆத்மஜோதி நிலைய வெளியீடு

★

1979

விலை ரூபா. 1/50

# முன்னுரை

உலகில் உள்ள எல்லா மக்களும் இன்பம் வேண்டியே வாழு கின்றனர். ஆனால் அவ்வின்பத்தை எவ்வாறு அடைவது என்பதுதான் ஒருவரும் நன்கு அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. இன்பம் எங்கே இருக்கிறது? அது எப்படி இருக்கும்? என்று தேடித் தேடி அலுத்துச் சலிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று இன்பம் போலத் தோன்றுகிறது. இன்பம் இன்பம் என்று நாடுவதெல்லாம் பெரும் ஏமாற்றமாய்த் துன்பத்தில் முடிகிறது. ஆகவே எது இன்பம் என்றே நமக்கு நன்றாகத் தெரிவதில்லை. இன்பம் அடையும் வழியிலும் நமக்குப் பழக்கம் ஏற்படுவதில்லை.

'இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு'

என்பது ஆன்றோர் வாக்கு. இறைவனை இடைவிடாது நினைப்பதனால் ஏற்படுகின்ற இன்பமே உண்மை இன்பம். அந்த இன்பத்தோடு பொருந்த வாழ்வதே இன்ப வாழ்வு. இன்பத்தைப் பெறுவதற்கு வழி என்ன? நாவுக்கரசுப் பெருமான் சொந்த அனுபவத்தில் இருந்து பதில் கூறுகின்றார்.

''துன்பமின்றித் துயரின்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்''

துன்பமில்லாமல் துயரில்லாமல் எப்பொழுதுமே நீங்காத இன்பத்தைப் பெறுவதற்கு ஒரே ஒரு மார்க்கம் அல்லும் பகலும் இடைவிடாது இறைவனை வணங்குதலே. ஆண்டவனை உள்ளத்திலே இருத்தி உள்ளம் உருகி வணங்குதற்கு இலகுவான மார்க்கம் அருளாளர்களின் பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவதாகும்.

'பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரம்'
என்பது மணிவாசகம்.

இறைவன் திருநாமமே அச்சத்தைப் போக்கவல்லது. நோயின் வேதனையால் நொடியும் பொழுதும், பேயின் செயல்களால் பேதுறும் பொழுதும், மனக்கவலையால் மயங்கும் பொழுதும், தனிவழியிலே தத்தளிக்கும் பொழுதும், இடுக்கண் எய்திய பொழுதும், பசியின் கொடுமையால் படர் மெலிவெய்திய பொழுதும், தீய எண்ணங்கள் மனோலயத்தைத் தாக்கும் பொழுதும் ஆண்டவன் நாமத்தை நாவால் உரத்துக் கூவினால் நம் துயரம் யாவும் உயரப் பறந்துவிடும். இதற்கு ஏற்ற வழி கூட்டுவழிபாடே. கூட்டு வழிபாட்டில் இப்போது ஒரு புது மலர்ச்சி தோன்றியுள்ளது. மக்கள் மனச்சாந்தி பெறுவதற்குக் கூட்டு வழிபாடு ஏற்ற மருந்து என்பதை உணர்ந்திருக்கிறார்கள். அந்த வழியிலே ஆத்மஜோதி நிலையமும் இந்நூலை வெளியிடுவதன் மூலம் கூட்டு வழிபாட்டிற்குச் சிறிய தொண்டு ஆற்றலாம் என்று கருதியே இதனை வெளியிடுகின்றது.

அரன் நாமமே சூழ்க; வையகமுந் துயர் தீர்கவே.

நா. முத்தையா,

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
1-1-79.

அச்சுப்பதிவு:

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.

சிவமயம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாரிபதம் நாடு.

# பன்னிரு திருமுறை

## முதலாம் திருமுறை

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய பெம்மா னிவனன்றே.

## 2-ம் திருமுறை

நீ நாளும் நன்னெஞ்சே நினை கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ் நாளுஞ் சாய்க்காட் டெம்பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும்நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

## 3-ம் திருமுறை

கொல்வாரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லாரேனு மியம்பு வராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே.

## 4-ம் திருமுறை

சலம்பூ வொடுதூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினு முன்னை மறந்தறியே
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்

உலந்தார் தலையிற் பலிகொண்டுழல்வாய்
உடலுள் உறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே.

## 5-ம் திருமுறை

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே.

## 6-ம் திருமுறை

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளாமணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன்தானே.

## 7-ம் திருமுறை

பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவாரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்களெல்லார்க்கு மடியேன்

முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலுமடிச்சார்ந்த வடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரி லம்மானுக்காளே.

## 8-ம் திருமுறை

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

## 9–ம் திருமுறை

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## 10-ம் திருமுறை

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

## 11-ம் திருமுறை

சிரித்திட்ட செம்பவ ளத்தின்
திரளுஞ் செஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும்
வெங்கதப் பாந்தளுந்தீத்
தரித்திட்ட அங்கையுஞ் சங்கச்
சுருளும் என் நெஞ்சினுள்ளே
தெரிந்திட்டவா தில்லைச் சிற்றம்
பலத்துத் திருநடனே.

## 12-ம் திருமுறை

உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

# பஞ்சபுராணப் பாடல்கள்

## ஞாயிற்றுக்கிழமை

1. தேவாரம்:

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்

பண்-சீகாமரம்] திருச்சிற்றம்பலம் [2ம் திருமுறை

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே.

2. திருவாசகம்:

மணிவாசகப்பெருமான்

திருச்சிற்றம்பலம் [8ம் திருமுறை

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

கருவூர்த்தேவர்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணுரைச் சொரிந்தாலும்
செய்யாவோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

4. திருப்பல்லாண்டு: [9ம் திருமுறை

சேந்தனார்

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருளள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

5: பெரியபுராணம் [12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

## திங்கட்கிழமை

1. தேவாரம்:

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண்-கொல்லி] திருச்சிற்றம்பலம் [3ம் திருமுறை

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகையிருந்ததே.

2. திருவாசகம்: மணிவாசகப்பெருமான் [8ம் திருமுறை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாய
நமவெனப் பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ்
சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற்
கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே
வெறுத்திடவே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

பூந்துருத்தி நம்பி காட நம்பி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

4. திருப்பல்லாண்டு: சேந்தனார் [9ம் திருமுறை

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்: [12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

திருச்சிற்றம்பலம்.

## செவ்வாய்க்கிழமை

1. தேவாரம்:

திருநாவுக்கரசு நாயனர்

திருவிருத்தம்:] திருச்சிற்றம்பலம் [4ம் திருமுறை

ஈன்ருளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்ரு யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்ரு னிமையவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்ருத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

2. திருவாசகம்: [8ம் திருமுறை

மணிவாசகப்பெருமான்

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான் முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
ருன்வந்து முந்துமினே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

பூந்துருத்தி நம்பி காடநம்பி

களையா உடலொடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

4. திருப்பல்லாண்டு: [9ம் திருமுறை

சேந்தனுர்

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெருத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமைமண வாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

5. பெரியபுராணம்: [12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத்து விகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

## புதன்கிழமை

1. தேவாரம்:

திருநாவுக்கரசு நாயனுர்

திருத்தாண்டகம்] திருச்சிற்றம்பலம் [6ம் திருமுறை

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்

ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணுராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்ருர் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ருரே.

2. திருவாசகம்: [8ம் திருமுறை

மணிவாசகப்பெருமான்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

சேந்தனர்

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் ருென்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

4. திருப்பல்லாண்டு : [9ம் திருமுறை

சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்: [12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

திருச்சிற்றம்பலம்

## வியாழக்கிழமை

1. தேவாரம்:

சுந்தரமூர்த்தி நாயனார்

பண்-கொல்லி] திருச்சிற்றம்பலம் [7ம் திருமுறை

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும் சார்வினும்
தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தைபுகலூர்
பாடுமின் புலவீர்காள்

இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள் வதற்கு
யாதுமையுற வில்லையே.

2. திருவாசகம் : [8ம் திருமுறை

மணிவாசகப் பெருமான்

அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை யெல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

3. திருவிசைப்பா : [9ம் திருமுறை

கருவூர்த்தேவர்

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றுயிரங் கூறிட்டு
அத்திலங் கொருகூறு உன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும்நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

4. திருப்பல்லாண்டு: [9ம் திருமுறை

சேந்தனார்

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்: [12ம் திருமுறை

சேக்கிழார்பெருமான்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக்
கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## வெள்ளிக்கிழமை

1. தேவாரம்:

சுந்தரமூர்த்திநாயனார்

பண்–தக்கேசி] திருச்சிற்றம்பலம் [7ம் திருமுறை

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்

பின்னையென் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறியொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற் பழனத்
தணியாரூ ரானை மறக்கலுமாமே.

2. திருவாசகம்: [8ம் திருமுறை

மணிவாசகப்பெருமான்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டு கொள்ளே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

திருவாலியமுதனார்

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர் தன் ஆடுமே.

4. திருப்பல்லாண்டு: [9ம் திருமுறை

## சேந்தனுர்

குழலொலி யாழொலி கூத்தொலி
    ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று
    விம்மிமிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
    யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடி யாரொடும் கூடி
    எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம்: [12ம் திருமுறை

## சேக்கிழார்பெருமான்

மண்ணினிற் பிறந்தார். பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினுல் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனின் உலகர் முன் வருகென உரைப்பார்.

திருச்சிற்றம்பலம்.

# சனிக்கிழமை

1. தேவாரம்:

## திருநாவுக்கரசு நாயனுர்

திருவிருத்தம்] திருச்சிற்றம்பலம் [4ம் திருமுறை

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த்தொ
திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா [ழிந்தேன்
ஒருபற் றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

2. திருவாசகம்: [8ம் திருமுறை

மணிவாசகப் பெருமான்

இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிதுமற் றின்மை
சென்று சென்றணுவாய்த்தேய்ந்து தேய்ந்தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

3. திருவிசைப்பா: [9ம் திருமுறை

கண்டராதித்தர்

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிர வர்நின்னோடு
ஒத்தேவாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டு பாடும் தென் தில்லையம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல்காண அணைவதும் என்றுகொலோ.

4. திருப்பல்லாண்டு: [9ம் திருமுறை

சேந்தனார்

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
சீராட்டுந் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
ஊறும் அமிர்தினுக் காலநிழல்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

5. பெரியபுராணம் : [7ம் திருமுறை

சேக்கிழார் பெருமான்

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே
லுன்னையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும்நான்
மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போதுன் னடியின்கீ
ழிருக்கவென்றார்.

திருச்சிற்றம்பலம்

---

# விநாயகர் வழிபாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

பாலுந் தெளிதேனும் பாகும்பருப்பு மிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்–கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந தா.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது–பூக்கொண்டு
துப்பார் திருமேனி த்தும்பிக்கை யானபாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

கைத்தலம் நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே.

ஜய கணேச ஜய கணேச ஜயகணேச பாஹிமாம்
ஸ்ரீ கணேச ஸ்ரீ கணேச ஸ்ரீகணேச ரட்சமாம் (ஜய கணேச)
கணநாதம் கணநாதம் ஈஸ்வர புத்ரம் கணநாதம்
விக்நவிநாயக கணநாதம் சித்திவிநாயக கணநாதம்
பார்வதிபுத்ரம் கணநாதம்முக்தி பிரதாயக கணநாதம்
மூக்ஷிக வாகன கணநாதம் மோதஹஹஸ்தா கணநாதம் (கணநாதம்)
சிவசிவ கெஜமுக கணநாதா, சிவகணவந்தித குணநாதா
வாவா வாவா அங்குசபாசா, வந்தருளின்பந் தந்திடுநேசா
உமைதருபாலா குருமணியே, உந்தனடைக்கலம் அடியோமே
மகாகணபதே குருசரணம் மனம் மகிழ்ந்து வந்தருள் சரணம்
சரணம் சரணம் தந்திமுகா சரவணபவனுக்குயர் துணைவா
[சிவ சிவ]

கணபதிஓம் ஜெயகணபதிஓம்
கணபதிஓம் ஜெயகணபதிஓம்
மூக்ஷிகவாகன கணபதிஓம்
மோதக ஹஸ்தா கணபதிஓம்
சாமர கர்ண கணபதி ஓம்
விளம்பித சூஸ்திரா கணபதிஓம்
வாமன ரூபா கணபதிஓம்
விக்ந விநாயக கணபதி ஓம்
மகேஸ்வர புத்திரா கணபதிஓம்
பாத நமஸ்தே கணபதிஓம்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தப்பி தனக் கூகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே

# குரு வழிபாடு

அழுந்தொறும் அணைக்கும் அன்னை
அறிவிலாது ஆடி ஓடி
விழுந்தொறும் எடுக்கும் அப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந்தொறும் காக்குந் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்
குழந்தை யிப்படி உலாவுமென்
குருநாதன் வாழி வாழி.

காயனை அகாய ஞக்கிக்
கண்டனை அகண்டனுக்கிப்
பேயனைப் பிரம்ம மாக்கி
பிறப்பிறப் பிலாமை யாக்கி
தாயினும் இனிய ஞகி
தகைந்தெனை யணைத்து ஆண்ட
தூயசற் குருவே உன்னைத்
தொழுந்தொறும் களிதுலங்குமே.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

## எங்கள் குருநாதன்

என்னை யெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி யென்தலை வைத்தான் எங்கள் குருநாதன்

அன்னைபிதாக் குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மை தீமையறியா தான் எங்கள் குருநாதன்
நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
ஆதியந்தமில்லை யென்றா னெங்கள் குருநாதன்
அதுவே நீ யென்றுரைத்தா னெங்கள் குருநாதன்
சோதிமய மென்று சொன்னா னெங்கள் குருநாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள் குருநாதன்
சாதி சமயமில்லா னெங்கள் குருநாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள் குருநாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள் குருநாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள் குருநாதன்.

## நாமாவளி

குருநாதா குருநாதா சத்குருநாதா ஓடிவா
தீனநாதா தீனபந்து திவ்யவடிவே ஓடிவா
ஞானநாதா ஞானபோதா ஞானவடிவே ஓடிவா
அனாதிநாதா ஆனந்தரூபா அற்புதசரித்திரா ஓடிவா
குருநாதா குருநாதா சத்குருநாதா ஓடிவா.

ஓம் குருநாதா ஓம் குருநாதா
ஓம் ஜெகந்நாதா ஓம் ஜெகந்நாதா
ஓம் குருநாதா ஓம் ஜெகந்நாதா.

ஸ்ரீ குருநாதா சத்குருநாதா
ஸ்ரீ குரு சத்குரு சச்சிதானந்த குரு
சச்சிதானந்தகுரு சச்சிதானந்த
சகலமும் நீயே எனக்கருள்வாயே
அச்சுதனும் அயனும் அரனும் நீயே
ஐந்தொழில் புரியும் சக்தியே குருவே
இச்சையுடன் பணிந்தோம் எமக்கருள்வாயே
எங்கும் நிறைந்தாய் சத்குரு நீயே
சச்சிதானந்த ஸ்ரீ சிவகுருநாதா
சுவாமிநாதா ஜெய ஜெய குரு ஓம்.

## சிவ வழிபாடு

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்
சிவசிவ என்றிடத் தேவருமாவார்
சிவசிவ என்னச் சிவகதிதானே.

காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேனினிப்பிற வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறை யூரிற் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே.

## சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே — எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூரெங்கோன்
திருவாசக மென்னும் தேன்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை

முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன் றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம் பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்குமனத்தால் விமலா உனக்கு
கலந்து அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எங்காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப்பணிந்து.

நாமாவளி

சம்போ சிவா சம்போ சிவா
சம்போ சிவா சிவசம்போ சிவா
சம்போ சங்கர கௌரீசா சிவ
சாம்ப சங்கர கௌரீசா
சம்போ சங்கர உமாபதே சிவ
சாம்ப சங்கர உமாபதே
சம்போ சங்கர நடராஜா சிவ
சாம்ப சங்கர நடராஜா

நடராஜா நடராஜா
சிதம்பரேசா நடராஜா
நடராஜா நடராஜா
சிற்சபேசா நடராஜா
நடராஜா நடராஜா
கனகசபேசா நடராஜா
நடராஜா நடராஜா
தில்லைத் தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா
ஆனந்தத் தாண்டவ நடராஜா

சிவசிவ சிவசிவ நடராஜா
சிவகாமிப் பிரிய நடராஜா
அரிபிரமாதியர் தேடிய பாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
அம்பர விம்ப சிதம்பர நாதா
அஞ்சுத குஞ்சித ரஞ்சித பாதா

கனக சிதம்பர சங்கர புரகர
அனக பரம்பர சங்கர கர கர
சங்கர சிவா சங்கர சிவா
சம்போ மகாதேவ சங்கர சிவா.

அம்பலத் தரசே அரு மருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே
சிவசிவ சிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக வமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவேக பரம்பரவேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
கருணாநிதியே சபாபதியே
கதிமாநிதியே பசுபதியே
இக்கரை கடந்திடிலக்கரையே
இருப்பது சிதம்பரச் சர்க்கரையே
என்னுயி ருடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராசப் புத்தமுதே
ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுத லானந்த நாடகமே
அம்பலவா சிவா மாதேவா

அம்பலவா இங்கு வா வா வா
நடராச னெல்லார்க்கும் நல்லவனே
நல்லதெல்லாஞ் செயவல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போனகங் கொண்டோமே
சங்கர சிவசிவ மாதேவா
எங்களை யாட்கொள வா வா வா
நடனசிகாமணி நவமணியே
திடனகமாமணி சிவமணியே
நடமிடு மம்பல நன்மணியே
புடமிடு செம்பல பொன்மணியே
உவட்டாது தித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே
நடராச வள்ளலை நாடுதலே
நந்தொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட்பெருஞ்சோதி யென்னாண்டவனே
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு
அம்பல வாணனை நாடினனே
அவனடியாரொடும் கூடினனே
தம்பத மாபுகழ் பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே
நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே

நடராஜர் தம்நட நன்னடமே
நடம்புரிகின்றது மென்னிடமே
சிவகாமவல்லிக்கு மாப்பிளேயே
திருவாள ஞனவன் சீர்ப்பிள்ளேயே
அம்பல வாணர் தம் மடியவரே
அருளர சாள்மணி முடியவரே.

---

## சக்தி வழிபாடு

பூரணி புராதனி சுமங்கலே சுதந்தரி
புராந்தகி திரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனுதீத நாயகி குணுதீத
நாதாந்த சத்தி யென்றுன்
ஞமமே யுச்சரித்திடு மடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
வகிலாண்ட கோடியீன்ற
வன்னேயே பின்னேயுங் கன்னியென மறைபேசு
மானந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலே
வளர்காதலிப் பெண்ணுமையே.

தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்சுவையே அகந்தைக்கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுளத்தில் அழகு ஒழுக
எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழல்காடேந்தும் இளவஞ்சிக்கொடியே வருகவே
மலையத்துவசன் பெற்றபெருவாழ்வே வருக வருகவே.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்த தாய்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பகலும் அநவரதமுந் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி.

தொண்டர் நாதன் துணைவி பராசக்தி
கண்ட கண்கள் களிக்கு மனோன்மணி
கொண்ட நெஞ்சங் குளிரு மருட்சிவை
வண்டுவார் குழ லம்மையை வாழ்த்துவாம்.

## நாமாவளிகள்

சரஸ்வதி சரஸ்வதி! சௌபாக்கியதாயினி சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! சகல கலாவாணி சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! கலையெல்லாம் தருவாய் சரஸ்வதி!!
சரஸ்வதி சரஸ்வதி! நலமெல்லாம் அருள்வாய் சரஸ்வதி!!
தஞ்சமென்றே வந்தேன் சரஸ்வதியே — எந்தன்
தாயே தருணம் வா சரஸ்வதியே
நெஞ்ச முருகிப்பாட சரஸ்வதியே
நாவிலே நிர்த்தனம் செய் சரஸ்வதியே
வெள்ளைத்தாமரை வாழும் சரஸ்வதியே
உள்ளங் குழையப் பாட அருள் தருவாய்
கள்ளங் கபடொழித்துக் கொஞ்சித்தமிழில்—தாயைக்
கண்டு களிக்கப் பாட்டு பாடவையம்மா.

அம்பா பரமேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
ஆதி பராசக்தி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி தேவி மகேஸ்வரி
அன்ன பூர்ணேஸ்வரி ஆண்டருள்வாய்
அம்பா பரமேஸ்வரி ஸ்ரீ புவனேஸ்வரி
ஸ்ரீ லலிதேஸ்வரி பாலயமாம்
அம்பா பரமேஸ்வரி ராஜ ராஜேஸ்வரி
ஆனந்த ரூபிணி ஆண்டருள்வாய்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஆதி பராசக்திஓம்
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய ஜெகன் மாதா
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய லலிதாம்பா.

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்

சத்திய ஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம் சிவம்
சச்சிதானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம் சிவம் (சுத்த)

வேத சாஸ்திர சகலகலா வித்தியா சக்தி ஓம் சிவம்
வீர தீர தைர்ய சக்தி விஜய சக்தி ஓம் சிவம் (சுத்த)

நர்தகீத கானகலா நடன சக்தி ஓம் சிவம்
மகாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸ்ய சக்தி ஓம் சிவம் (சுத்த)

யோக போக தியாக சக்தி லோக சக்தி ஓம் சிவம்
தாகமோக சோகரகித தபோ சக்தி ஓம் சிவம் (சுத்த)

துஷ்டசத்ரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம் சிவம்
அஷ்டலட்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம் சிவம் (சுத்த

குஞ்சிதபாத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹர ஹர நடராஜ சுத்தசக்தி ஓம் (சுத்த)

ஓம் சக்திஓம் ஓம் சக்திஓம் ஓம் சக்திஓம்
ஓம் சக்திஓம் ஓம் சக்திஓம் ஓம் சக்திஓம்

சுந்தர வதன சுகுண மனோகரி
மந்தகாச முடைமதி வதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே. (ஓம்சக்திஓம்)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே. (ஓம்சக்திஓம்)

தங்கச் சிலம்பு சல சலவென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்களநாயகிமகிழ்வாய்வருவாய் (ஓம்சக்திஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரிசரணம்சரணம் **(ஓம் சக்தி ஓம்)**

## சரஸ்வதி சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவிலமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடையாளே
மூவுலகுந் தொழு தேவி
செப்புக வித்தன் முலையாய்
செவ்வரியோடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர்வாயே
சரஸ்வதி என்னும் திருவே
எக்காலு முனைத் தொழுவேன்
எழுத்தறி புத்தி பண்ணிவைப்பாய்
ஆக்கா யெம் பெருமாட்டி
அழகிய பூவணை மீதே
நோக்கா யென் மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலி நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து

கல்விக் கரசே நமோஸ்து
கணக்கறி தேவி நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூட்சுமச் சொரூபி நமோஸ்து

## ஸ்ரீ துர்க்கா சித்தர் அருளிய
## துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே;
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே எழுந்த நல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக் கொடுத்த நல்குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற் சக்தியெனும் மாயே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி;
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெய ஜெய ஸ்ரீதேவி;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!

# திருமால் வழிபாடு

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர்
ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும் அருளோடு
பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும்
ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினை காணாவே.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

## ராமநாம மகிமை

### திரு விருத்தம்

அகரமென அறிவாகி அகிலசர அசரவுயிர்
ஆக்குவதும் ராமநாமம்
ஆழ்வார்கள் பன்னிருவர் பாடு தமிழ் மாமறைகள்
அறைவதும் ராமநாமம்

உரமென அண்டபகிரண்டத்துள்ளி உயிர்கடமை
ஓம்புவதும் ராமநாமம்
ஓதரிய நான்மறைகள் உபநிடதம் ஆகமத்
துட்பொருளும் ராமநாமம்
மகரமென நின்றுலகின் மன்னுயிர்கள் யாவையும்
மறைத்தருள் செய் ராமநாமம்
மாமறைகள் ஏத்தரியவைகுந்த வீட்டினிடை
வாழ்வதும் ராமநாமம்
நிகரில்பர ஞானமோ னத்தவர் உளந்தனில்
நின்றொளிரும் ராம நாமம்
நேடிய தெலா மூதவு தேவர் துயர் தீர்த்தருள்செய்
நேசராம ராமஜெயமே.

## நாமாவளி

*ராமராம ராமராம ராமநாம தாரகம்*
*ராமகிருஷ்ண வாசுதேவ பக்தி முக்தி தாயகம்*
*ஜானகீ மனோஹரம் சர்வலோக நாயகம்*
*சங்கராதி சேயமான புண்யநாம கீர்த்தனம் (ராமராம)*
*சீதாராம் சீதாராம் சீதாராம் ஜய சீதாராம்*
*தசரத நந்தன தேசிகராம் கங்கா யமுனா சீதாராம்*
*(சீதாராம்)*

*ஸ்ரீ ராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் [3 தடவை]*
*நாராயண ஓம் நமச்சிவாய வெனுஞ்*
*சாரமான நல்ல தாரக மந்த்ரம் (ஸ்ரீ ராம்)*

*நாரதர் வால்மீகி முனிவர் நவின்றது*
*ஆரமுதாய் அன்பர்க்கானந்தம் ஈன்றது (ஸ்ரீ ராம்)*

*காமாதிக் கள்வரை கட்டுட னொழிப்பது*
*நேமநிஷ்டை யுள்ள நெஞ்சினில் செழிப்பது (ஸ்ரீ ராம்)*

பக்தி வைராக்கியமும் பரந்த சமரசமும்
சுத்தசச் சிதானந்தச் சித்தியும் அளிப்பது (ஸ்ரீ ராம்)
கோவிந்த ஜய ஜய கோபால ஜய ஜய
ராதா ரமணஹரி கோவிந்த ஜய ஜய (கோவிந்த)
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே (ஹரே ராம)

---

## முருக வழிபாடு

திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலும் கடம்பும் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்தென் உள்ளங்குளிரக் குதிகொண்டவே.

அஞ்சுமுகந் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரை யான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

## திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்

கண்ணால் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகியிரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலம்செய்து னது புகழ்
பண்ணால் உருகிப் புகழ்ந்து கண்ணீர்
பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதி வாழும்
அண்ணால் வருக உலகமுழு
தாண்டாய் வருக கதி தரு மெம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்கு கதிர்
வண்ணா வருக மயிலேறு
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே.

## திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

பேராதரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறுங் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமானென்னும் பேராளா

சேரா நிருதர் குலகலகா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து விருப்புடனப்
பாவா வாவென்றுனைப் போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளரும் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

## நாமாவளி

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் மருகா
திருமால் மருகா வடிவே லழகா
வடிவே லழகா வன்னமயில் வாகா

வன்னமயில் வாகா வந்தெனை யாள்வாய்
வந்தெனை யாள்வாய் வடிவேல் முருகா
வடிவேல் முருகா வேல் வேல் முருகா
வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா
வெற்றிவேல் முருகா ஞானவேல் முருகா
ஞானவேல் முருகா சத்திவேல் முருகா
ஐயா முருகா அரகர முருகா
அரகர முருகா சிவசிவ முருகா
சிவசிவ முருகா ஜெய சிவ முருகா

முருகா

கதி நீ மதி நீ கதிர்வேல் முருகா
துதிசெய் யடியார் துணைநீ யரசே
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்
புதிதா கியவாழ் வருள்புங் கவனே!

சக்திக் கனலே சமர்செய் பகையை
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே
தொத்தித் தொடருந் துயரங் களைவாய்
பக்தர்க் கருளும் பரமன் மகனே!

பவபந் தனைசிந் துக; பற்றொளிக;
தவசா தனைசித் திதழைத் தொளிர்க;
கவலை கதிர்முன் பனிபோ லழிக;
சிவசண் முகஓம் செயவேல் முருகா!

அருளார் முகமும் அடியார்க் கபயம்
தருபொற்கரமும் தணலார் விழியும்
கருணைப் பொழிவும் கனிவாய் நகையும்
திருமார் பழகுந் திகழும் முருகா!

தாயிற் பெரிதாய தயாபரனே
நேயர்க் குபசாந்த நிகே தனனே,
காயத் திரியின் கருவே குக ஓம்
நேயச் சுடரே! சிவசண் முகனே!

அன்பர்க் கெளிதாய் வருவாய் அபயம்
நம்பன் உமைநாதன் அருட்கனலே
உன்பா தம்உளத் தினில்ஊன் றிடவே
என்பால் குருவாய் வருவாய் இறைவா!

இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்
புரியுந் தொழில்யா வையும்பூ சனையாய்ப்
புரியும் படிசெய் பரிபூ ரணனே!

பண்ணின் ஒலியே, பரிதிக் கொளியே
கண்ணின் மணியே, கனியின் சுவையே
மண்ணின் வளமே, மலரின் மணமே
விண்ணின் விரிவே, அறிவின் விளைவே!

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா
அன்பர்கள் நேயா அம்பிகை புதல்வா
துன்பம் மகற்றிடும் சீலா பாலா

சிவசிவ குமரா முருகா வருக
பரமா புருஷா வரந்தர வருக
கலங்கா தெனையே காத்திடு முருகா
மலந்தா னணுகா வரந்தா முருகா

காவாய் முருகா கார்த்திகைக் குமரா
வாகா முருகா சாகா வரந்தா
வாவா முருகா வினைதீர்த் திடவே
யோகா முருகா பகை மாற்றிடவே

பொன்னடி போற்றி பணிந்திடவே
சென்னியி லுன்னடி ஓங்கிடவே
தேடிய நலங்கள் செறிந்திடவே
பாடிய புகழ்கள்மலிந்திடவே

குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குலதெய்வம் தேவ
குஞ்சரியை மணம்புரிந்த ,, ,,
சரவணையில் வந்துதித்த ,, ,, சிவ
சண்முகமாய் வந்துதித்த ,, ,,
பழனிமலை வீற்றிருக்கும் ,, ,, சிவ

பக்தர்களைக் காத்தருளும் எங்கள் குல தெய்வம்
பண்டாரம் போலிருக்கும் ,, ,, தேவ
பச்சை மயிலேறிவரும் ,, ,,
ஆண்டிவேடம் பூண்டிருக்கும் ,, அவர்
அண்டினோரை ஆதரிக்கும் ,, ,,
வேலாயுதம் தரித்த ,, ,, வடி
வேல்முருக நாமம்படைத்த ,, ,,
தெண்டாயுதம் தரித்த ,, ,, பால
தெண்டபாணி பேருடைய ,, ,,
விபூதி தரித்திருக்கும் ,, ,, அவர்
வீறுமயிலேறி வரும் ,, ,,
ஆறுமுகமான பொருள் ,, ,, அவர்
ஆறுபடை வீடுடைய ,, ,,
சிவனுருக்குபதேசித்த ,, ,, சிவ
சுப்ரமண்ய பேருடைய ,, ,, பால
சுப்ரமண்ய பேருடைய ,, ,,

சரவண பவனே பரதெய்வம்
தரணியி லவனே மெய்த் தெய்வம்
பக்தர்க் கிரங்கும் விசுவாசன்
பழனிப் பதிவாழ் முருகேசன்
முருகன் திருவடி தரிசனமே
முத்திக் கொருதுணை யறிமனமே
சரவண பவகுக வெனவருமே
சத்திய ஞானத் திருவுளமே
பவப்பிணி யொழித்திடும் மருந்துண்டு
பன்னிரு திருக்கரன் திருத்தொண்டு
கதிர்வடி வேலன் திருவடியே
கதிதரும் துணையதை நீபிடியே

சண்முக சுந்தர வேலவனே
சங்கரி யீன்றருள் பாலகனே
அறுமுகன் திருவடி மலர்மறவோம்
அவனியிலே யினிநாம் பிறவோம்
கந்தனை யன்பினைச் செய்யுங்கள்
சிந்தனை யவனடி வையுங்கள்
வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்ய பிறவியைத் தாண்டுங்கள்.

## முருகன் அழைப்பு

பல்லவி

வேல் முருகா மால்மருகா வா வா சண்முகா
கால்பிடித்தேன் காத்தருள வாவா சண்முகா

அனுபல்லவி

நால்வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா சண்முகா
செல்வமாகச் சிவையணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல்தாங்கிய என் தேவா சண்முகா (வேல்)

சரணம்

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலை தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா (வேல்)

நாறுமாலை யணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறுமயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா (வேல்)

வீடும்நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல்கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னைநாட ஆடிவா சண்முகா
ஒருவனே என்வினையளித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையில்லா ஆனந்தனே ஏகாந்த சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏமுருகா சண்முகா
தில்லையில் ஆடுந் தேவி பாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா சண்முகா (வேல்)

தொல்லையெல்லாம் கடந்த பதம் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள் முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்)

## அர ஹரோ ஹரா

| | |
|---|---|
| அரஹரோ ஹரா சுவாமி | அரஹரோ ஹரா |
| அரஹரோ ஹரா சுவாமி | அரஹரோ ஹரா |
| கதிர்காம வேலனுக்கு | — — |
| கந்தப்ப சுவாமிக்கு | — — |
| திருப்பரங்கிரி தீரனுக்கு | — — |
| திருச்செந்தூர்த் தேவனுக்கு | — — |
| திருப்பழனிச் செல்வனுக்கு | — — |
| திருவேரக பாலனுக்கு | — — |
| குன்றிலாடும் குமரனுக்கு | — — |
| குஞ்சரிதன் கணவனுக்கு | — — |
| குறவள்ளி காந்தனுக்கு | — — |
| குணங்கடந்த லோலனுக்கு | — — |
| சோலைமலைக் கிழவனுக்கு | — — |
| சொகுசுக்கார முருகனுக்கு | — — |
| சிவசக்தி வடிவனுக்கு | — — |
| சிங்கார வேலனுக்கு | — — |

அகங்கார நாசருக்கு அரஹரோ ஹரா
அன்பர்களின் நேயருக்கு — —
ஓங்காரத் தத்துவர்க்கு — —
ஓம் சக்தி தந்தவர்க்கு — —
அரஹரோ ஹரா சுவாமி — —
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா

அடியார்க்கு நல்ல பெருமாளே - எனை
ஆண்டிட நீ ஓடிவா
ஓடிவா அப்பா ஓடிவா - நீ
ஓடிவா முருகா ஓடிவா (அடியார்க்கு)

முடியா முதலே பெருமாளே - எனை
முற்றிலு மாண்டிட ஓடிவா
வடிவேலரசப் பெருமாளே - உனை
வணங்கினேன் ஆண்டிடஓடிவா (அடியார்க்கு)

புள்ளி மயிலேறும் பெருமாளே - எனைப்
புனித ஞாக்கிட ஓடிவா
அள்ளிப் பருகும் பெருமாளே - என்றன்
ஆனந்தத் தேனே ஓடிவா (அடியார்க்கு)

வள்ளி காந்தப் பெருமாளே - உன்னை
வணங்கினேன் ஆண்டிட ஓடிவா
துள்ளி யோடும் நினை வோயவே - அப்பா
துதித்தே னணைத்திட ஓடிவா (அடியார்க்கு)

உள்ளங்கவரும் பெருமாளே - உனை
உருகிப்பாடிட ஓடிவா
கள்ளம் நிறைந்த பெருமாளே - உனைக்
கருணையனென்றே நம்பினேன் (அடியார்க்கு)

பொங்கும் அன்பே பெருமாளே—இந்தப்
புலியாய் நின்ற பெருமாளே
மங்களமான பெருமாளே—மன
மாயை ஒடுங்க ஓடிவா (அடியார்க்கு)

கல்நெஞ் சுருக்கும் பெருமாளே—சிறு
காற்சிலம் பொலிக்க ஓடிவா
தில்லைக் குருவின் பெருமாளே—இங்குத்
தித்தோம் தித்தோம் என்றாடிவா (அடியார்க்கு)

கதிர்வேலழகப் பெருமாளே—என்
கண்மணி கதிர்காமப் பெருமாளே
துதிசெய் அன்பர் பெருமாளே — யாம்
சுகமாய் வாழ ஓடிவா (அடியார்க்கு)

அருவமு முருவுமாகி யனாதியாய்ப் பலவாயொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரெண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினாலளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதின் வீற்றிருந்தருளினானே.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடியாரெல்லாம்.

இறவாமல் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

ஏறுமயி லேறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதி யருணசலம் அமர்ந்த பெருமாளே.

## மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
சீதா ராம மங்களம் ராதா க்ருஷ்ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்.

–0–

''சரீரத்தின் மத்தியில் சோதிமயமாகப் பிரகாசமாயிருப்பது ஆத்மா.
அது சத்தியத்தினுலும், தவத்தினுலும், நல்ல ஞானத்தினுலும்
அடையத்தக்கது.
பிரமச்சரியத்தால் உணரத்தக்கது.
அதை அறிவோர் புலன்களை வென்றவர்.
அத்தகையோர்க்குத் தோஷங்கள் இடையா''

—உபநிடதம்

காலங்கடந்த இந்த உபநிடதப் பேருண்மையினுல்
அனுபூதி பெற்ற மெய்ந்நெறியாளரின் உபதேசங்களை
ஓயாது இடித்துரைக்கும் ஒரே ஒரு பத்திரிகை

# ஆத்மஜோதி

ஈழத்திலும் இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான
மெய்ந்நெறிநாட்ட முடையவரின் அபிமானத்துக்குரிய
மாத சஞ்சிகை:

ஆண்டுச் சந்தா ரூபா 10/-
வெளிநாடுகளுக்கு ரூபா 20/-
ஆயுள் சந்தா ரூபா 250-00

## ஆத்மஜோதி நிலையம்,

நாவலப்பிட்டி
*ஸ்ரீ லங்கா.*